**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 3**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. தசரதன் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-07-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியரின் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியருக்கு ஓட்டுநராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 24.7.2018 அன்று இரவு 12 மணிக்கு மேல் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மணல் கடத்துவதாக வந்த தகவலின் பேரில் ரெய்டுக்கு நானும், வட்டாட்சியரும் சென்றோம். காஞ்சிரோடு காகா ஆஸ்ரமம் அருகில் பணியில் இருந்த போது எங்களுடன் பச்சையப்பன், நான் மற்றும் வட்டாட்சியர் இருந்தோம். அப்போது லாரி ஒன்று வந்தது. அதனை நிறுத்தி சோதனை செய்தார்கள். வண்டி வேகமாக சென்று விட்டது. நாங்கள் அதன் பின்னால் துரத்தி சென்றோம். கலர்கொட்டாய் கிராமம் அருகில் வண்டி சேற்றில் மாட்டிக் கொண்டு நின்று விட்டது. அதில் இருந்தவர்கள் இறங்கி ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

புகார்தாரர் செங்கம் வட்டாட்சியர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/- தசரதன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 4**

**Name** : திரு. பச்சையப்பன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-07-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பெரியகோளாப்பாடி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சமார் 5 வருடத்திற்கு முன்பு மணல் கடத்துவதாக வந்த தகவலின் பேரில் அவர்களை பிடிக்க வேண்டும் என்பதற்காக செங்கம் வட்டாட்சியர் ரேணுகா என்னை கூப்பிட்டார் அவருடன் நான், பச்சையப்பன், கோபிநாத் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் சென்றோம். காஞ்சி ரோடில் உள்ள காகா ஆஸ்ரமம் அருகே வாகன தணிக்கையில் இருந்த போது மணல் லாரி ஒன்று வேகமாக வந்தது. அதனை தடுத்து நிறுத்தி சோதனை செய்து விசாரணை செய்து கொண்டிருந்தோம். அதற்குள் வண்டி வேகமாக கொண்டு சென்று விட்டார்கள். அதற்கு பின்னால் நாங்கள் ஜீப்பில் துரத்தி சென்றோம். வேகமாக சென்று கொண்டிருந்த லாரி கலர்கொட்டாய் அருகே பள்ளத்தில் இறங்கி லாரி நின்று விட்டது. லாரி இருந்தவர்கள் அனைவரும் தப்பித்து ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள், நடந்ததை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் சம்பவ தேதி அன்று என்னுடைய சொந்த வீட்டில் விண்ணவனூரில் இருந்தேன். இரவு 10 - 10.30 மணிக்கு எனக்கு வட்டாட்சியரிடம் இருந்து எனக்கு போன் வந்தது. நாங்கள் கண்ணக்குறுக்கை கிராமத்தில் நின்று கொண்டிருந்தோம். வட்டாட்சியர் வந்து அழைத்து சென்றார்கள்.

அன்றைய தினம் நான் வாகன சோதனைக்கு செல்லவில்லை என்றும், வட்டாட்சியருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- பச்சையப்பன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 5**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. கோபிநாத் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-07-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது செங்கம் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2018ம் ஆண்டு நீப்பத்துறை கிராம உதவியாளராக பணியில் இருந்த போது வட்டாட்சியர் அவர்கள் என்னை அழைத்தார்கள். வட்டாட்சியருடன், பட்டுசாமி, தசரதன், பச்சையப்பன் ஆகியோர் மணல் கடத்துவதாக வந்த தகவலின் பேரில் பரூர் சாலையில் காகா ஆஸ்ரமம் அருகில் வாகன சோதனையில் இருந்தோம். அப்போது மணல் ஏற்றி வந்த லாரியை மடக்கினோம். அந்த லாரியில் மணல் இருந்தது. மணல் எடுத்து வருவதற்கான அரசு அனுமதி ரசீதை கேட்டார்கள். லாரியில் இருந்தவர்கள் ரசீது இல்லை என்று சொன்னார்கள். லாரியை எடுத்துக் கொண்டு வேகமாக சென்றார்கள், நாங்கள் ஜீப்பில் பின்னால் துரத்தி சென்றோம். லாரி பள்ளத்தில் இறங்கி நின்று விட்டது. நான் சென்று பார்த்தபோது லாரியில் இருந்தவர்கள் ஓடி விட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

நீப்பத்துறை கிராமத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன். எனக்கு வட்டாட்சியரிடம் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது நான் நீப்பத்துறையில் தான் இருந்தேன். நீப்பத்துறை கிராமத்திற்கும், திருவண்ணாமலை காகா ஆஸ்ரமத்திற்கும் இடையே சுமார் 60 கி.மீட்டர் இருக்கும். காகா ஆஸ்ரமம் பகுதி செங்கம் வட்டாட்சியர் ஆளுகைக்கு உட்பட்டது தான். காகா ஆஸ்ரமம் எல்லையில் உள்ள சிப்பந்திகளோ, உதவியாளர்களோ அன்றைய தினம் செங்கம்

வட்டாட்சியருடன் இல்லை. வட்டாட்சியர் லாரியை தடுத்து விசாரித்துக் கொண்டிருக்கும் போது நான் வட்டாட்சியருடன் இருந்தேன். நான் லாரியில் என்ன இருந்தது என்று பார்த்தேன். வட்டாட்சியர் லாரி மணல் ஏற்றுபவர்களிடம் லஞ்சம் கேட்டதாக சஸ்பன்ட் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. வட்டாட்சியர் லாரியின் ஓட்டுநரை அடித்து விட்டதால் அவர்கள் மீது ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அவருடைய கீழ் பணிபுரிவதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 50 கி.மீட்டர் தூரத்தில் இருந்து காகா ஆஸ்ரமத்திற்கு தணிக்கைக்கு வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் தணிக்கைக்காக வட்டாட்சியருடன் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- கோபிநாத்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.